# இஸ்லாமியத் தமிழ்க்காப்பிய வரிசையில் திருநபி காவியம் - ஒரு நோக்கு

**Mrs. Selva Ampigai Nandakumaran [1] and Mr. YM. Ashraff [2]**

[1] Department of Tamil, University of Jaffna, Sri Lanka.
[2] KM/ KM Al- Ashraq madhiya maha vidyalayam, Ninthavur, SriLanka.
(selvampikai@gmail.com)

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழ்மொழி இலக்கியப் பாரம்பரியமும் வரலாற்றுப் பாரம்பரியமும் கொண்டது. தமிழில் பல சமய இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இவற்றுள் இஸ்லாமிய இலக்கிய வரலாறு ஆயிரக்கணக்கான பக்கங்களில் எழுதத்தக்க தகுதிப்பாடு உடையது என்பதற்கு முகம்மது உவைஸ் அவர்களின் "இஸ்லாமிய இலக்கிய வரலாறுஜி தக்க சான்றாகின்றது. இஸ்லாமியக் கவிஞர்கள் தமிழை வளர்த்ததோடு தமிழ்மொழியை அழிவினின்றும் பாதுகாத்தவர்கள். தமிழ் மரபினை ஏற்றுக்கொண்டு இலக்கியங்களைப் படைத்ததோடு இஸ்லாமியருக்குரியதான புதியவகைச் சிற்றியலக்கியங்களையும் தமிழுக்கு அறிமுகம் செய்தனர். இஸ்லாமியக் காப்பிய வரிசையில் தோன்றிய 'திருநபி காவியம்ஸி இந்தக் கட்டுரையில் ஆராயப்படவுள்ளது. இதன் ஆசிரியர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் ஆவார். திருநபி காவியம் இந்த ஆய்வின் மூலமாக அமைகின்றது. விபரணமுறை, பகுப்பாய்வு முறை, ஒப்பீட்டு முறை ஆகிய அணுகுமுறைகள் ஆய்வில் மேற்கொள்ளப்படும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பலரால் இலக்கியமாக்கப்பட்டுள்ளன. எனினும் வாழ்க்கை முழுவதையும் நிறைவாக உள்ளடக்கிய இலக்கியங்களாக அவை அமைந்திருக்கவில்லை. திருநபி காவியம் நபிகள் நாயகத்தின் (ஸல்) வாழ்க்கை வரலாற்றை முழுமையாகப் பாடியுள்ளதா என்பதை இனங்காண்பதே இந்த ஆய்வின் நோக்கம். தமிழ்க்காவிய மரபுகளை உள்வாங்கி அதே நேரம் காலதேவைக்கேற்ப புதுமைகளையும் புகுத்திக் காவியம் படைக்கப்பட்டுள்ளமை ஆய்வில் இனங்காணப்பட்டுள்ளது.*

***திறவுச் சொற்கள்:*** *காவியம், இஸ்லாமிய இலக்கியம், இறைதூதர்*

### அறிமுகம்

#### இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாற்றுப் பகுப்பு

தமிழ்மொழி இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் வரலாற்றுப் பாரம்பரியத்தையும் இலக்கண இலக்கியப் பாரம்பரியத்தையும் கொண்டது. தமிழ் இலக்கிய வரலாற்றை அரசியல் சமூகப் பொருளாதார சமய தத்துவ நோக்கில் காணலாம். உலகப் பெருஞ்சமயங்கள் தமிழகத்தின் மண்ணில் தழைத்தோங்கியுள்ளன. சமணம், பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற பெருஞ் சமயங்களின் இலக்கியங்கள் பெற்ற பெருமை இந்திய மொழிகளில் தமிழுக்கே உண்டு. "பக்தியின் மொழி தமிழ்" என்ற சிறப்பு எல்லாச் சமயத்தவர்களுக்கும் பொருத்தமானதே. தமிழ் இலக்கிய வரலாற்றில் இஸ்லாமியரின் பங்கும் பணியும் விதந்து போற்றத்தக்கன. தமிழை வளர்த்து வளம்படுத்தியவர்கள் மட்டுமல்லாது குறிப்பிட்ட காலகட்டத்தில் தமிழை அழிவினின்று தடுத்துக் காத்தவர்களும் இஸ்லாமியர்கள்.

விஜயநகர நாயக்கர் காலத்தில் தெலுங்கர், மராட்டியர், கன்னடத்தவர்களின் ஆட்சியினால் தமிழ்நாடு சிதறுண்டு கிடந்தது. பிறமொழிகளின் செல்வாக்கு மேலோங்கி இருந்ததனால் சிறந்த தமிழ் இலக்கியங்கள் தோன்றுவதற்குரிய வாய்ப்பு இருக்கவில்லை. தமிழ் இலக்கிய உலகம் இருள் சூழ்ந்திருந்த இந்தக் காலகட்டத்தை இஸ்லாமியத் தமிழ் புலமையுலகம் முழுமையாகத் தமக்கு உரிமை உடைய காலமாக ஆக்கிக் கொண்டது. கி.பி 16ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 19ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதி 'இஸ்லாமியர் காலம்' எனச் சிறப்பித்துக் கூறுமளவிற்கு இஸ்லாமியர் தமிழ் இலக்கியப் பணி ஆற்றியுள்ளனர்.

பழங்காலம் தொட்டே அரபுமக்கள் தமிழ் நாட்டுடன் தொடர்பு கொண்டிருந்தனர். இக்காலகட்டத்தில் முஸ்லீம்கள் வாணிபத்தோடு நின்று விட்டாரேயன்றி இலக்கிய ஆக்க முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளவில்லை. கி.பி. 14ஆம் நூற்றாண்டளவில் மாலிக்கபூர் தென்னாட்டின் மீது படையெடுத்த நாளில் இந்துக்கள் சிலர் இஸ்லாம் சமயத்தைத் தழுவினர். 17ஆம் 18ஆம் நூற்றாண்டுகளில் நவாபுகள் தமிழகத்தை ஆட்சி செய்தனர். அக்காலத்தில் தமிழ்நாட்டில் முஸ்லீம்கள் தொகை பெருகியது.

முஸ்லீம் மக்களின் குடியேற்றம் அதிகரிக்க இஸ்லாம் பற்றி அறிவு நூல்கள் தேவைப்பட்டன. ஆரம்ப காலத்தில் முஸ்லீம் அறிஞர்கள் தமிழில் நன்கு பயிற்சி பெற்றவர்களாக விளங்கவில்லை. ஆகவே அந்த இஸ்லாமிய அறிஞர்கள் இஸ்லாம் பற்றிய தமிழ் நூல்களை அரபு எழுத்துக்களில் எழுதத் தலைப்பட்டனர். இவை 'அரபுத் தமிழ் இலக்கியங்கள்' என வழங்கப்படலாயின.

காலப்போக்கில் தமிழ்அறிவு வளரத் தமிழில் எழுதப்பெற்ற இஸ்லாமிய இலக்கியங்கள் தமிழ் எழுத்துக்களிலும் எழுதப்பட்டன. தமிழைத் தாய்மொழியாக ஏற்றுக் கொண்ட பின்னர் தமிழில் இஸ்லாமிய இலக்கியங்கள் பலவற்றைச் செய்ய வேண்டும் என ஆர்வம் கொண்டனர். இஸ்லாமிய சமயக் கருத்துக்களையும் கோட்பாடுகளையும் வெளியிடக்கூடிய ஊடகமாகத் தமிழ்மொழி அமைந்திருந்ததை உணர்ந்தனர். இதன் காரணமாக இலக்கியத்துறை அவர்களைப் பெரிதும் கவர்ந்தது. இக்காலத்தில் எழுந்த இஸ்லாமிய இலக்கியங்களின் போக்கையும் நோக்கையும் அவதானித்தால் மரபுகளின் சுவடுகளும் சமுதாய ஒழுங்குகளும் புதிய சிந்தனைகளும் வெளிப்பட்டு நிற்கின்றன. இஸ்லாமியப் புலவர்கள் தமிழ் இலக்கிய மரபினை முற்றும் ஏற்றுக்கொண்டு காப்பியம், சிற்றிலக்கியம் முதலான இலக்கிய வடிவங்களை ஆக்கினார். தமிழிலக்கியப் பிரபந்தங்கள் மட்டுமன்றி இஸ்லாமியருக்குரியதான படைப்போர், நாமா, கிஸ்ஸா, மஸ்லா முதலான புதிய சிற்றிலக்கியங்களையும் தமிழுக்கு அறிமுகம் செய்தனர்.

**திருநபி காவியக் கட்டமைப்பு**

காவியங்கள் பல மொழிகளில் தோன்றியுள்ளன. தமிழ் இலக்கியத்தில் முழுமையான காப்பியங்கள் என்று தகுதிபெற்றனவாகக் கருதப்படுவன தண்டியலங்காரத்தில் கூறப்பட்டுள்ள காப்பிய இலக்கணங்களைக் கொண்டே தோன்றியுள்ளன. தண்டியலங்காரம் குறிப்பிடும் காப்பிய இலக்கணத்தைப் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

1. வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல் என்பவற்றுள் ஒன்றினைக் கொண்டு ஆரம்பித்தல்.
2. மக்கள் பின்பற்றக் கூடியதாக அறம், பொருள், இன்பம், வீடு என நூற்பயன் அமைதல்.
3. இயற்கை வருணனை இடம்பெறுதல்.
4. தன்னிகரில்லாத் தலைவன்.
5. அத்தகைய தலைவனுடைய குடிமரபு, பிறப்பு, இளமை, திருமணம், பூம்பொழில், நுகர்தல், புனல் விளையாடல். காதல், ஊடல், மகப்பேறு, முடிசூட்டல், ஆட்சி. அரசியல் தொடர்பு, போர், வெற்றி, முதலியவை பற்றிய வருணனை.
6. சருக்கம், இலம்பகம், பரிச்சேதம், படலம் என ஒன்றினால் பகுக்கப்பட்டிருத்தல்.
7. பல்சுவை மெய்ப்பாடுகளும் மிளிர்வதாக அமைந்திருத்தல்.

மேற்குறித்த காவிய இலக்கண மரபினை உள்வாங்கியும் இஸ்லாமிய சமய நெறியினை அனுசரித்தும் 'திருநபி காவியம்' பாடப்பட்டுள்ளது. கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் ஆவார். முகம்மதுநபி (ஸல்) அவர்களின் வாழ்வியல் நிகழ்ச்சி காப்பியத்தின் கருப்பொருளாக அமைந்துள்ளது. கவிஞர் ஜின்னாஹ் அவர்கள் கவிதை, நாவல், சிறுகதை, காவியம், சிறுவர் இலக்கியம் எனப் பல்துறைப்பட்ட ஆளுமை கொண்டவர். திருநபி காவியம் உட்பட பத்து காவியங்களைப் படைத்த சிறப்பிற்குரியவர். மருத்துவ சிகிச்சையின் நிமித்தம் ஓய்வுற்றிருந்த மூன்று மாதக்காலப் பகுதியில் நபிபெருமானின் காவியத்தைப் பாட விழைந்ததாக காவியம் பிறந்த காதையிலே ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். மேலும் கவிஞர் ஜின்னாஹ் அவர்கள் இக்காப்பியத்தை இயற்றப் பொருளுதவி வழங்கி ஊக்கிவித்தவர் அவரது தயார் ஆயிஷா உம்மா. இவரை நன்றியோடு நினைவு கூறுகின்றார்.

"கம்பனுக்கு சடையப்ப வள்ளல் அப்துல்
காஸிம் உமர்ப் புலவருக்குக் கொடைவள்
ளல்கள்
எம்பெருமான் காவியஞ்செய் என்ற னுக்கு
எனதன்னை ஆயிஷாதான் ஏற்றம் பெற்றார்."

திருநபி காவியத்தில் 1438 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. காவியம் காண்டங்களாகவோ படலங்களாகவோ பழைய மரபுக்கேற்ப வகுக்கப்படவில்லை. மாறாகக் காலதேவைக்கேற்ப நபிபெருமானாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் 91 சிறுதலைப்புக்களாக்கிப் பாடப்பட்டுள்ளன. ஒவ்வொரு கதை நிகழ்வுக்கும் பொருத்தமான தலைப்புக்கள் இடப்பட்டிருப்பது கதையைப் புரிந்து கொள்வதை இலகுவாக்கின்றன. காவியத்தைப் படிக்கும் அனைவரும் கதையில் வரும் நிகழ்ச்சிகளை எளிதில் புரிந்து கொள்வதை நோக்கமாகக் கொண்டு கவிஞர் செயற்பட்டிருக்கின்றார். இப்புதிய நோக்கு கவிஞரின் ஆழ்ந்த புலமைக்கு எடுத்துக்காட்டு. இக்கதையைத் தொடங்குவதற்கு முன்பு தமிழ்க்காப்பிய மரபுக்கேற்ப கடவுள் வாழ்த்து, அவையடக்கம், நூன்முகம், நாட்டுப்படலம், நகரப்படலம் ஆகியவற்றை அமைத்துள்ளார்.

திருநபி காவியத்தில் காப்பும் அவையடக்கமும் கூறி அரேபிய நாடு, மக்கா, மதீனா, தாயிப் நகரங்களின் அன்றைய நிலை ஆகியவற்றைப் பாடியுள்ளார். மரபைப் போற்றிய போதிலும்

வேண்டும் இடங்களில் புதுமை புகுத்தத் தவறவுமில்லை.

“கற்றறியா “உம்மி” எங்கள் காருண்ய நாயகர்க்கு
முற்றுமுயர் ஞானம் மொழிந்தவனே - ஓங்குகவி பாட
உவந்தளிப்பாய் ஞானம்நீ காப்பு”

என அல்லாஹ்வைத் தன் நூலுக்குக் காப்பாகக் காப்புச் செய்யுள் பாடியுள்ளார்.

அவையடக்கம் கூறுகையில் சூரியனின் பேரொளியில் பங்கு கொள்ள ஏங்கும் சிறு அகல்விளக்குப்போல பிறபுலவர்கள் முன்னே தம்மைக்கருதிச் செல்கின்றார்.

பாலைநிலம் பற்றிய வருணனை இயல்பான முறையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதீத கற்பனைக்கு இங்கு இடமில்லை. தீப்பிழம்பாய்ச் சுடும் செஞ்சுடர்க்கதிர்கள், வேகமாக வீசுகின்ற காற்றினால் ஏற்படும் மண்குவியல்கள், கண்களைப் பொய்க்கச் செய்யும் கானல் நீர் எனப் பாலைநிலம் பற்றிய வருணனை அமைகின்றது.

சயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணியில் இடம்பெறும் பாலை நிலம் பற்றிய வருணனையை இக்காவிய வருணனை நினைவூட்டுவதாக அமைகின்றது. கொடுமையான பாலைவனத்தினூடாகப் பயணிப்போர் இளைப்பாறுவதற்குச் சோலை வனங்களும் இடையிடையே அமைந்துள்ளன. இதற்கு இறைவன் கருணைதான் காரணம் என்கின்றார். கவிஞர்.

“பாலையிற் பயணஞ் செய்வோர்
பசிதாகம் போக்கி ஆறப்
பாலையின் இடையிடையே
படைத்தவன் படைத்தான் காய்க்குஞ்
சோலைகள் தம்மை வல்லோன்
செய்கைதான் என்னே மாந்தர்
பாலுள்ள கருணை தன்னைப்
புகலற்கு அரிதா மன்றோ”
(திருநபி.10)

அரேபிய நாட்டை வருணனை செய்கையில்,
“பெரும் படைகள் கடந்ததனைச் சென்றிட் டாலும்
பாதகங்கள் விளைந்ததில்லை பார சீகத்(து)
உருப்பெற்ற பிற’ரோடான போர்கள் கூட
உணர்ச்சிபெறச் செய்யவில்லை அவற்றை எல்லாம்
கருத்தினிலே கொள்ளவில்லை அரேபியர்கள்
கண்ணயர்ந்து தூங்குவர்போல் வாழ லானார்
விருத்தியென்ப தில்லாத மண்ணாய் அந்நாள்
விளங்கியது அறியாமைக் காலம் அ∴தே.
(திருநபி.18)
எனப் பாடுகின்றார்.

மக்கா, மதீனா, தாயிப் என்னும் மூன்று நகரங்கள் பற்றியும் காவியத்தில் வருணிக்கப்பட்டுள்ளன. அந்நாளில் மக்கமா நகரம் ‘பக்கா’ என்னும் பெயரில் இருந்தது. ஏக தெய்வ வணக்கத்தின் பொருட்டு மண்ணில் ஏற்பட்ட முதற்பள்ளி க∴பாவாகும். சிலை வணக்கத்துடன் க∴பா இழிநிலைக்குள்ளானதை,

கறையோட்டுஞ் சூரியனுஞ் சந்திரன் தானும்
காட்டுமரம் போன்றவையும் கல்லும் மண்ணும்
இறைவடிவ உருக்கொண்டு புனித க∴பா
இழிநிலைக்குள் னானதந்த அறியார் காலம்”
(திருநபி.22)

என்று கூறுகின்றார். அதுபோலவே மதீனா அன்றைய நாளில் ‘யத்திரிப்’ என்னும் பெயருடன் விளங்கியது. இறைதூதர் புகுந்த இடமாகி ‘மதீனத்துல் நபி’ என்றே மதீனாவாகி மாநாபி (ஸல்) அவர்களுக்குப் புகழ் சேர்க்கும் நகரமாகியது. அமாலிகளும் யூதர்களும் அஸ்த்குடிகளும் ஆண்ட யத்திரிப் நகரம் மதீனாவாக மாறிய பின்னர் நபிகளின் (ஸல்) ஆட்சிக்கு வந்தது என்பதையும் குறிப்பிடுகின்றார்.

தாயிப் நகரம் எத்தகைய வளமிக்கதாய் இருந்தது என்பதனை இறையருள் பெற்ற மண் எனப் புகழ்வதோடு,

“சீதளத்தத் தென்றலொடு சேர்ந்தே காயும்
செங்கதிரோன் ஒளிக்கதிர்கள் இளவெப்பாக
ஓதுவகைக் கனிவர்க்கம் அனைத்தும் ’ஆங்கு
உற்பத்தி ஆகி மக்கள் பசியைத் தீர்க்கும்
ஆதுலரே இலாத செல்வப் பூமி தாயிப்
அளிப்பதனைக் கொள்வதற்கு யாரு மற்றே
பூதலத்தின் பொற்பதியாம் என்னும் பாங்காய்
பரிணமித்த தாமற்றைக் காலப் போழ்தே”
(திருநபி.27)

என்று போற்றுகிறார். வறுமையில் பிறர் கொடுப்பதை வாங்குகின்ற மக்கள் இல்லாமல் பொன்விளையும் பூமி என்னும்படியாக சிறந்திருந்தது தாயிப் நகரம்.

ஆமினா அப்துல்லாஹ் திருமணத்தின் மூலம் முகம்மது நபி (ஸல்) அவர்களின் முந்தைய குலவழி மரபு விளக்கமாகக் காட்டப்படுகின்றது. முகம்மது நபி (ஸல்) பிறந்த நிலையில் கவிஞரின் கூற்றுக்கள் முகம்மது (ஸல்) இறைதூதர் என்ற நிலையினை நன்கு வெளிப்படுத்துவனவாகவுள்ளன

“மாதங்கள் ஈரைந்த காலை
மிதமான ஒளிசிந்தும் வேளை
பூதலத்(து) அருட்கொடை நாதர்
பிறந்தனர் ஆமினாத் தாய்க்கு
மாதமாம் றபியுல் அவ்வல்
முறைவரு பன்னிரண் டாம் நாள்
ஏதான தாமிறை எண்ணம்
என்பதால் பூமகள் உய்ந்தாள்”
(திருநபி. 91)

தொடர்ந்து முகம்மது நபி (ஸல்) அவர்களின் பெயர் சூட்டுவிழா, அமுதூட்டும் பருவம், இளமைக் காலம், தனித்த நிலை, கல்வி, வணிகப் பயணம், கதீஜாவை மணம் புரிதல் என்ற முறைப்படி காவியம் செல்கின்றது. நபிப்பட்டம் பெற்றதிலிருந்து ஏகத்துவக் கொள்கையினைப் பரப்புவதில் முகம்மது நபி (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட இடையூறுகளையும் அவற்றை எல்லாம் சகித்துக் கொண்டு சன்மார்க்கத்தினை உலகினில் ஓங்க வைப்பதற்கு இறுதி மூச்சு வரை உழைத்தமையும் காவியத்தின் இடைப்பகுதியில் சொல்லப்பட்டுள்ளன.

காவியத்தின் இறுதிப்பகுதியில் முகம்மது நபி (ஸல்) அவர்கள் மதீனத்து மண்ணில் மனித உள்ளங்களையெல்லாம் வெற்றிகொண்டு இஸ்லாமிய ஆட்சி ஒன்றின் கட்டமைப்பினை உருவாக்கியதன் விளைவாக மக்கா வெற்றி கொள்ளப்படுவதும், அதற்காக முகம்மது நபி (ஸல்) அவர்கள் சந்தித்த பல்வேறு சமாதான உடன்படிக்கைகள் போர்கள் என்பனவும் மக்கா வெற்றியின் பின்னர் இஸ்லாத்தை திசைகள் தோறும் எடுத்தியம்புவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் பலதாரமணங்களும் இறுதி ஹஜ்ஜும் உபதேசங்களும் இனிதே எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

**கவித்திறன்**

கவிஞர் ஜின்னாஹ் அவர்கள் திருநபி காவியத்தில் கையாண்ட வருணனை நயம், அணிநயம், சொல்லாட்சித்திறன் எல்லாம் அவர்தம் கவித்திறனைக் காட்டும் வகையில் காப்பியச் சுவையைப் பெருக்கி நிற்கின்றன. கவிஞர் ஏற்கனவே காவியங்கள் எழுதிக் கைவரப் பெற்றவர். எனினும் அவர்தம் அவையடக்கப் பாடலில்,

“பகலவன்றன் பேரொளியிற் பங்குகொள்ள ஏங்கும்
அகல்போன்றே நானும்” (அவையடக்கம்)

என்று பிறபுலவர்கள் முன்னே தான் சூரியன் முன்னே சிறுஅகல் விளக்குப் போல தம்மைக் கருதிச் செல்லும் நயம் போற்றத்தக்கது.

அக்காலத்தில் அராபியப் பெருங்குடியினர் தமது பிள்ளைச் செல்வங்களைப் பாலூட்டி வளர்க்கச் செவிலித்தாய்மார்களை விரும்புவர். அதைப் போலவே பாலூட்டி வளர்க்க குழந்தையைத் தேடி செவிலித் தாய்மார்களும் வருவர். இதனைக் கவிஞர் குறிப்பிடும்போது அழகான ஒரு உவமையைக் கையாளுகின்றார்.

“கன்றினைத் தேடி ஓடும் காராம்பசுக்கள் போன்றே
ஒன்றியே சென்றார்” (திருநபி. 111)

பொதுவாகத் தாய்ப்பசுவைத் தேடித்தான் பசுக்கன்றுக்கள் ஓடிவரும். இங்கே கன்றினைத் தேடிப் பசுக்கள் ஓடி வருகின்றன. சிறப்புப் பொருந்திய ஹலீமா தாயார் அருள் நிறைந்த பாலகர் முகம்மது (ஸல்) அவர்களுக்குப் பாலூட்ட வாய்ப்பு ஏற்பட்ட செய்தியைக் கவிஞர் அவர்கள் இவ்வுவமை மூலம் வெளிப்படுத்தி நிற்கின்றார்.
சொற்களைப் புதுமையாகக் கையாண்டு பாடல்களுக்கு புதுமெருகு ஊட்டியுள்ளார். ஒரே சொல்லை அடிதொறும் கையாண்டு பொருள் விளக்கமுற வைத்துள்ளார். எடுத்துக்காட்டாக ஒரு பாடலைக் காணலாம்.

“விருந்துண்ண அழைக்கப்பட்டோர் வரையிலார் வாழ்த்த வந்தார்
விருந்துமோர் மண்ட பத்துள் வகைவகை வரிசை கொள்ளும்
விருந்தினர் தமைஅ வைக்குள் வரவேற்றோர் வரவேற் றார்கள்
விருந்தினர் விரும்பும் வாறு வேண்டுவ தனைத்துங் கண்டார்” (திருநபி. 102)

மேற்குறித்த பாடலில் ‘விருந்து’ என்ற சொல்லை அடிதொறும் கையாண்டு பொருள் புலப்பாட்டினைப் புதுமையாக அமைத்துள்ளார். மேலும் காப்பிய முடிவிலே பெருமானாரின் தோற்றப் பாங்கினை கேசாதிபாதமாக வருணனை செய்து திருநபிகாவியத்தில் புதுமை புகுத்தியவர் கவிஞர் ஜின்னாஹ் அவர்கள்.

**இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் திருநபி காவியத்தின் வகிபாகம்**

அராபிய நாட்டில் தோன்றி இறைவன் ஒருவன் எனும் ஏகத்துவ நெறியினை அனைவருக்கும் உணர்த்தியவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். அரசியல் தலைவர்களாலும் ஆன்மீக ஞானிகளாலும் வரலாற்று மேதைகளாலும் புகழப்படும் ஒருவர். இவ்வளவு பெருமைக்குரியவரை பல கவிஞர்கள் காவியங்களாகவும் கவிதைகளாகவும் சிற்றிலக்கியங்களாகவும் பாடிப் போற்றியுள்ளனர். சிறப்பாகச் சரித்திரச் சான்றுகள் நிறைந்துள்ள நபிகள் நாயகத்தின் (ஸல்) வாழ்க்கை வரலாற்றினைக் காப்பியமாக வடித்த பெருமைமிக்கவர்களாகப் பலர் திகழ்கின்றனர். அவற்றைப் பின்வருமாறு பட்டியல் இட்டுக் காட்டலாம்.

1. சீறாப்புராணம் - உமறுப்புலவர்
2. நெஞ்சில் நிறைந்த நபிமணி - ஜி.எம்.எஸ்.சிராஜ்பாகவி
3. திருநபி காவியம் - ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
4. இறைப்பேரொளி நபிகள் நாயகம் அருட்காவியம் - துரை.மாலிறையன்
5. நபிகள் நாயகக் காவியம் - எம்.ஆர்.எம் அப்துற்ஹீம்
6. அண்ணலே யாரஸூலுல்லாஹ் - அபூஹாஷிமா
7. நபிபுகழ் காவியம் - அதிரைதாஹா
8. நாயகம் ஒரு காவியம் - மு.மேத்தா
9. நாயகம் எங்கள் தாயகம் - வலம்புரி ஜான்

இந்நிலையில் பெருமானார் வரலாற்றைக் கூறும் நிறைவான காவியமாக இலங்கையில் புலமைசார் கவிஞர்கள் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களால் படைக்கப்பட்டதுதான் 'திருநபி காவியம்' ஆகும். பெருமானார் வரலாற்றைப் பலர் பாட முயன்றபோதும் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்க்கை நிகழ்ச்சிகளை முழுமையாகப் பாடவில்லை என்றே கூறலாம். அந்த குறையினைப் போக்கும் பொருட்டு கவிஞர் ஜின்னாஹ் அவர்கள் நபிகளின் (ஸல்) வரலாற்றினை முழுமையான காப்பியமாக்கித் தந்துள்ளார். இதனை அவரே நூன்முகத்தினில் குறிப்பிட்டுள்ளார்.

''பற்பலபேர் நபிவாழ்வைப் பாடினாலும்
புதுப்புதிதாய்ப் பாடுவதற்குப் பொருளுண் டந்த
அற்புதரின் அறுபத்து மூன்று ஆண்டின்
அகில வாழ்வின் அணுவணுவும் ஆழி போன்றாம்
முற்றுமவை மொழிந்திடத்தான் முடியு மாமோ
முயன்றுபலர் சிற்சிலதே மொழிந்துள் ளார்போல்
கற்றறியான் நானும் என் கண்ணின் மேலாம்
கருணைநபி தனைப் பாடக் காத லுற்றேன்''
(நூன் முகம்)

''அறம், பொருள், இன்பம், வீடடைதல் நூற்பயனே'' என்னும் இலக்கணத்துக்கேற்பவும் ''வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல், நாடு, நகர வருணனைகள், தன்னிகரில்லாத் தலைவனை உடைத்தாய்'' எனும் பெருங்காப்பிய இலக்கணங்கள் பெரும்பான்மையாகப் பொருந்திவர திருநபி காவியம் படைக்கப்பட்டுள்ளது.

காண்டம், படலம் என்னும் காப்பியப் பகுப்புக்களை மாற்றிச் சிறுசிறு தலைப்புக்களில் காப்பியம் அமைந்துள்ளமை கருத்துத் தெளிவுக்கு இடமளிக்கின்றது எனலாம். காப்பியத் தலைவனைக் கேசாதிபாதமாக வருணனை செய்து பாடிய ஒரே காப்பியமாக அமைகின்றது. பொதுவாகக் காப்பியங்களிலே கதைத் தலைவியரையே பாதாதிகேசமாகவும் கேசாதிபாதமாகவும் வருணிக்கும் மரபு கவிஞர்களுக்குரியது. முற்றிலும் மாறுபட்ட வகையில் பெருமானார் அவர்களைக் கேசாதிபாதமாக வருணனை செய்து திருநபி காவியத்தில் புதுமை புகுத்தியுள்ளார். கவிஞர்.

''காதுவரை நீண்ட சற்றுச் சுருண்ட கேசம்
கடைசிவரை கருமையது விரிந்த நெற்றி
தோதாக அதற்கு நீண்ட புருவம் கண்கள்
தீட்சண்யம் மிக்கனவாய் கரிய வண்டாய்
மீதுற்ற இமையுரோமம் நீண்ட தாகும்
முனையுயர்ந்த நாசியோடு பக்கக் கன்னம்
மாதுளையின் கனிச் சாற்றின் வண்ணம் சற்றும்
மிகையில்லா நேர்த்தியொடு விளங்கிற் றாமே''
(திருநபி.1421)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பலதார மணம் புரிந்தவர். அவரது மனைவிமார்கள் பற்றிய விபரங்களை ஏனைய காவியங்களில் காண இயலாது. கவிஞர் ஜின்னாஹ் அவர்கள் அண்ணலாரின் மனைவிமார் பற்றிய செய்திகளைத் தனித்தனியாகப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். மேலும் பலதார மணத்திற்கான காரணங்கள் இவை என அறிவுரை பகர்வது போல் பாடியுள்ளதிறம் பாராட்டுக்குரியது.

**நிறைவு**

தமிழ் இலக்கியம் பரப்பில் மிக முக்கியமான ஒரு கூறாக இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் விளங்குகின்றது. ஏனைய சமயம் சார்ந்த தமிழ் இலக்கியங்களில் காணமுடியாத சில தனித்துவமான அம்சங்களையும் சிறப்பியல்புகளையும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் காணமுடிகின்றது, இஸ்லாமியருக்குக் கனமாக இலக்கியப் பரப்பொன்று இருப்பதை இஸ்லாமியப் புலவர்களால் ஆக்கப்பட்ட மரபான இலக்கிய வடிவங்களும், நவீன இலக்கியங்களும் சான்று பகர்கின்றன. இஸ்லாமியக் கவிஞர்கள் இஸ்லாமியக் கொள்கையைப் பரப்புவதை மட்டுமே தம் இலக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

அராபிய நாட்டில் தோன்றி இறைவன் ஒருவன் என்ற ஏகத்துவக் கொள்கையினை அனைவருக்கும் உணர்த்தியவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். அண்ணலாரின் வாழ்க்கையை உமறுப்புலவர் முதல் இன்றுவரை பலநூறு கவிஞர்கள் போற்றிப் பாடியுள்ளனர். காவியங்களை ஆக்கித் தந்தவர்கள் வரிசையில் கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களால் படைக்கப்பட்டதுதான் 'திருநபி காவியம்' ஆகும். தமிழ்க் காப்பிய மரபுகளை உள்வாங்கித் திருநபி காவியத்தைப் பாட முயன்ற போதும் சில இடங்களில் புதுமைகளையும் புகுத்தியுள்ளார். நபி பெருமானாரின் (ஸல்) வாழ்க்கை வரலாற்றைப் பலர் பாடியுள்ள போதும் அவரது பிறப்பு முதல் இறப்பு வரையான வாழ்வியலை முழுமையாகப் பதிவு செய்த காப்பியமாக 'திருநபி காவியம்' அமைகின்றது.

உலகம் சுருங்கி வரும் இன்றைய நிலையில் மனித உள்ளங்களை நெருங்கி உறவாடி ஒன்றுபடுத்தும் ஆற்றல் இலக்கியங்களுக்கே உண்டு. ஒருமைப்பாடு என்னும் உயர்ந்த குறிக்கோளை மனிதகுலம் அடைவதற்கு இலக்கியமே இணையற்ற சாதனம் என்பதை அறிவுலகம் உணர்ந்து வருகின்றது. இளந்தலைமுறை ஆய்வாளர்கள் புதிய சிந்தனைகளில் தமது நோக்கத்தைச் செலுத்துவதன் மூலம் இஸ்லாமித் தமிழ் இலக்கியங்கள் பற்றிய செய்திகளை வெளிக்கொணரமுடியும்.

**உசாத்துணைகள்**


1) அப்துல் ஸமது, அ,ஸ., (1996), இஸ்லாமிய இலக்கிய நோக்கு, இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்.
2) கனி, ஆர், பி.எம்., (1963) இஸ்லாமிய இலக்கியக் கருவூலம், அருள்நூல் பதிப்பகம்.
3) சாயபு மரைக்காயர், மு., (1996), இஸ்லாமியர் தமிழ்த் தொண்டு, கங்கை புத்தக நிலையம், திருத்திய பதிப்பு.
4) சீனிச்சாமி,து., (1994), தமிழில் காப்பியக் கொள்கை (I, II), தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு.
5) செய்யிது ஹசன், எஸ், ஏ., (1968),இஸ்லாமிய தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள், அரசு வெளியீடு.
6) முகம்மது உவைஸ், (1996), இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாறு, தொகுதி I, II, மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகம்.
7) நசீமா பானு, சா., (2009) திருநபி காவியம், 20ம், 21ம் நூற்றாண்டுகளில் வெளிவந்த நபிகள் நாயகக் காப்பியங்கள், பன்னாட்டு இஸ்லாமிய இலக்கியக் கழகம்.
8) ஜின்னாஹ் ஷரிபுத்தீன் (2006) திருநபி காவியம், அன்னை வெளியீட்டகம்.